ஆழ்வாரெம்பெருமானுஜீயர் திருவடிகளே சரணம்.

முகவுரை.

இப்போதைய காலத்திலிருக்குங்காப்போல், தங்களை யும், ஈச்வரனையும் மறந்து, ஈச்வர சங்கல்பத்தையுமிழந்து இழந்தோமென்கிற நினைவுமில்லாமல் ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து கோவைபட்டுக் கொண்டிருக்கிற சேதநர்களை, ஸர்வேச்வரன் இவர்கள் கலாபமும் சேரும் படி தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று வெளியிட் டருளின பரமாகிஞ்சந்யமான திருமந்த்ரத்தையும், பரம பதத்திலே பெரிய பிராட்டிக்கு உபதேசித்து விஷ்வக்ஸேன் பர் மூலமாக விலாஞ்சூழ்ந்து சேதநர்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு உபதேச பரம்பரா ப்ராப்தமாய்ன் இடைத்தமந் த்ர ரத்னமான த்வயத்தையும், திருவேங்கடமுடையான் அர்ஜுனனுக்கு உபதேசித்து அவன் முகமாய் சேதனர்களுக் கும் கிடைக்கும்படி செய்த சரமச்லோகத்தையும் கௌர வர்களான நமபோன்றவர்களும் மாதாரு இயமுமில்லா மல் தெரிந்துகொள்ளும்படி மிகவும் தெளிவான நடையில் ஸ்ரீ உபயே. காஞ்சி பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரி யர் ஸ்வாமி முமுக்ஷுப்படி லாபமென்கிற ஸ்ரீவசனத்தை வெளியிட்டிருப்பது இவ்வுலகுக்குப் பரம உபகாரமென் பது நிச்சயம்.

முமுக்ஷுப்படியின் மூன்று ப்ரகரணங்களுக்கும் தாத் பரிய ஸாரம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அமிர்தமாகத் திரட்டி ஸ்வாமி அளித்திருப்பது நம்முடைய பாக்யமே. இந்த தாத்பரிய ஸாரத்தைச் சுருக்கி எழுதும்படிக்கு

http://acharya.org

அடியேனுக்கு ஒரு ஆசை தோன்றியது. ஆனால் இதற்கு அடியேன் அருஹனல்லேன். அதற்குத்தகுந்த யோக்யதை யும் அடியேனிடத்திலில்லை.

மிகவும் குறைவான காலத்தில் ஆசார்ய உபதேசம் பெற்று முமுக்ஷுப்படியைக் காலக்ஷேபம் செய்த ஒருவன் தான் கற்றுக்கொண்டது என்னவென்று அடிக்கடி நினைத் தூட்டிக்கொள்ளும்பொருட்டு, ஸ்வாமியினுடைய வியாக்யான ஸாரத்திலிருந்தும் ஸ்வாமியின் அனுக்ரஹத்தாலும் அடியேனே "அன்று நான் பிறக்கிலேன் பிறந்தபின் மறக்கிலேன்" என்றபடி நினைத்து உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டி ஸ்ரீ உபய வேதாந்தாசார்யவர்யம் சிந்தாமணி வெங்கடாசாரியர் ஸ்வாமி பரமகருணையுடன் டெங்கணிக்கோட்டைக்கு எழுந்தருளி அடியேனுக்கு ஆசார்ய ஸ்தானத்தை வஹித்து முமுக்ஷுப்படி முதலிய ரஹஸ்யங்களை காலக்ஷேபமுகேந அடியேனுக்கும் இன்னும் அனேக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் உபதேசித்ததில் அடியேன் சிற்றறிவிற்கேற்றபடி அறிந்துகொண்ட விஷயங்களிலிருந்தும் விஞ்ஞாபனமாகச் சில விஷய ஸாரங்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். இவைகள் ஸ்வாமியினுடைய வியாக்யானங்களில் உள்ளவையே தவிர ஒன்றும் புதியதில்லை. இவைகள் அடியேன் எதிர்ப்பார்க்கும் உபகாரத்தைச் செய்யக்கூடுமென்று நம்புகிறேன். விரிவான வ்யாக்யானத்தைத் தெரிந்துகொள்ள ஸ்வாமியினுடைய விரிவான ஸாரத்தையே கடாக்ஷிக்கவேண்டும்.

முகவுரை முற்றிற்று.

ரஹஸ்யார்த்த விஞ்விடை.

வி(1) முமுக்ஷு என்பவன் யார்?

வி ஸம்ஸார விமோசனத்தில் இச்சைபிறந்தவன் முமுக்ஷு வாவன். * மோக்ஷம் இச்சு:- முமுக்ஷு: * என்று வ்யுத்பத்தி.

வி(2) அவன் அறியவேண்டிய ரஹஸ்யம் யாவை?

வி அவன் அறியவேண்டிய ரஹஸ்யம் மூன்று.

(i) ஓம் நமோ நாராயணாய (திருமந்திரம்.)

(ii) ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே ஸ்ரீமதே நாராயணாயநம:. (த்வயம்)

(iii) * ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச: * (சரமச்லோகம்.)

வி(3) முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன? எதற்காக?

வி முதலில் தெரிந்துகொள்ளவேண்டியது திருமந்திரம். இது ஸ்வஸ்வரூபத்தின் உண்மையைத் தெரிவிக்கிறது. இது தெரிந்துகொண்டபின்புதான் உபாயோபேயங்களைத் தெரிவிக்கும் மற்ற இரண்டு ரஹஸ்யங்களையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

வி(4) ஸ்வஸ்வரூபம் என்பது என்ன?

வி ஸ்வஸ்வரூபம் என்பது

(1) ஜீவாத்மா எம்பெருமானுக்கே சேஷப்பட்டவன்.

(2) எம்பெருமானையே ரக்ஷகனாக உடையவன்.

(3) எம்பெருமானுக்கே போக்யமாக உரியவன்.

வி (5) ரஹஸ்யங்களில் ஒன்றுக்கொன்றுக்குள்ள ஸம்பந்தம் என்ன?

வி ஓம் என்பது ப்ரணவம். திருமந்திரத்தில் ப்ரணவார்த்தத்தை 'நமோநாராயணாய' என்கிற மந்திரசேஷம் விவரிக்கிறது. மந்திரசேஷத்தின் அர்த்தத்தை "த்வயம்" விவரிக்கிறது.
த்வயார்த்தத்தை சரமச்லோகம் விவரிக்கிறது.

வி (6) மந்திரம் என்பது என்ன?

வி "மந்தாரம் த்ராயத இதி மந்த்ர:" தன்னை அநுஸந்திப்பவனை ரக்ஷிக்கிறது மந்த்ரம்.

வி (7) ரக்ஷணம் எத்தனை வகை? எப்படிப்பட்டவை?

வி ரக்ஷணம் இரண்டு வகை:—

(i) சப்த சக்தியால் ரக்ஷணம்.

(ii) அர்த்தத்தைஉணர்த்தி அவ்வகையால்ரக்ஷணம்

(i) சப்தசக்திரக்ஷணம் மந்த்ரத்தை ஜபம் பண்ணியும் ஹோமம் பண்ணியும் பலத்தை எதிர்ப்பார்க்கிற உபாஸகர்களுக்கு.

(ii) அர்த்த சக்தியால் ரக்ஷணம் எம்பெருமானே உபாயோபேயம் என்றிருக்கும் ப்ரபன்னர்க்கு.

வி (8) திருமந்திரத்திற்கு மறுபெயர்என்ன?

வி திருமந்த்ரத்தை "மந்த்ரராஜம்" என்று சொல்வார்கள்.

வி (9) பிரணவத்தின் பதங்கள் யாவை? அவைகள் எவைகளைச் சொல்லுகின்றன?

வி பிரணவத்தின் பதங்கள் அகார உகார மகாரங்கள். "அவாப்தே" என்கிற தாதுவிலிருந்து தோறின அகாரத்தால் ஸர்வரக்ஷகனை எம்பெருமானைச் சொல்லுகிறது.

"உ"காரம் ஜீவாத்மா எம்பெருமானுக்கே உரியவன் என்பதைச் சொல்லுகிறது.

"மக-ஜ்ஞாகே" என்கிற தாதுவிலிருந்து தோறின மகாரம் ரக்ஷகத்தைக்காட்டிலும் வேறுபட்டவனை ஜீவாத்மாவைச் சொல்லுகிறது. (ரக்ஷகமே ஆத்மா என்கிற ப்ரமமும் நிவர்த்தியாகிறது)

வி (10) "நமோ நாராயணாய" என்கிறவாக்யத்திலுள்ள பதங்கள் எதைக்காட்டுகின்றன?

வி "நம:" பதம் நான் என்னுடையது என்பதைத் தவிர்த்து அகிஞ்சனப்போலே எம்பெருமானுக்குப் பரதந்த்ரனாயிருக்கையைச் சொல்லுகிறது.

"நாராயண" பதம் * கொண்ட பெண்டிர் மக்கள், உற்றார், சுற்றத்தவர் இவர்கள் எல்லோரும் நாராயணனே என்பதைத் தெரிவிக்கிறது,

"ஆய" பதம் எல்லா அடிமைகளும் நாராயணனுக்கே யென்பதைக் காட்டுகிறது.

வி (11) எம்பெருமானைப்பற்றின மந்திரங்கள் எத்தனை வகை? அவை எதை விவரிக்கின்றன?

விடை எம்பெருமானைப்பற்றின மந்த்ரங்கள் இரண்டுவகை (i) வியாபக மந்த்ரங்கள் எம்பெருமானுடைய ஸ்வரூபம் ஸ்வ வியாபகம் என்பதைக்காட்டுகின்றன. (ii) அவ்யாபக மந்த்ரங்கள் எம்பெருமானுடைய அவதாரங்களோ, குணங்களோ சேஷ்டிதங்களோ இவற்றில் ஒருசிலவற்றைக் காட்டுகிற மந்த்ரங்கள்.

விளை (12) எவ்வகை மந்த்ரங்கள் சிறந்தவை? யாது காரணம் பற்றிச்சிறந்தவை?

விடை வ்யாபக மந்த்ரங்கள் சிறந்தவை, அவைகளிலும் விஷ்ணுகாயத்ரி மந்த்ரங்களான நாராயண, வாசுதேவ, விஷ்ணுமந்த்ரங்களே ச்ரேஷ்டங்கள். இம்மூன்று மந்த்ரங்களிலும் அஷ்டாக்ஷரிக்கு மேற்பட்ட மந்த்ரமில்லை. மக்களுக்கும் மாணிக்கர்களுக்கும்திருவஷ்டாக்ஷரமந்த்ரத்திற்கு மேற்பட்டமந்த்ரமில்லையென்று ஆணையிட்டுக் கைதூக்கிச்சொல்லுகிறார் ஒரு முனிவர்.

ஏனெனில் வாஸுதேவ விஷ்ணுமந்த்ரங்களுக்கு அதிஷ்டாநிக்ரஹமும், அபூர்த்தியுமுண்டு; திருவஷ்டாக்ஷரம் அப்படியல்லாமல் நாரசப்தத்தாலே வியாபிக்கப்படும் வஸ்துக்களும், பரஸ்ரீநிலமாஸப்தத்தாலே அந்தர்யாமித்வமும், புருஷஸமாஸப்தத்தாலே தாரகத்வமும், அயந சப்தத்தில் காரணோபயுக்தியினுல் உபாயத்வமும், சர்மணி வ்யுத்பத்தியால் உபேயத்வமும், ஆக வ்யாப்ய பதார்த்தங்கள், வ்யாபனப்ரகாரம் வ்யாப்தி பலன் வ்யாபகனுடைய குணங்கள் ஆகிய எல்லாமும் சொல்லப்பட்டனவாதலால் இது ஒன்றே அர்த்தபூர்த்தியையுடையதாயிற்று.

வி (13) இம்மந்த்ரத்தை அனுஸந்திக்க வேண்டிய முறையென்ன? அனுஸந்திக்கிறவனுடைய குணங்கள் எப்படியிருக்கவேண்டும்?

வி இப்படிப்பட்ட பரம, மந்த்ரமாயும், பரம ரஹஸ்யமாயும், பரமபவித்ரமாயும் விளங்குகிற திருமந்த்ரத்தை சிஷ்யன் கனிந்த நெஞ்சுடன், [அதாவது இம்மந்த்ரத்திலும், இதற்குப் பொருளாயிருக்கிற ஸர்வேச்வரன் விஷயத்திலும், இந்த மந்த்ரத்தைப் பரம காருணியோடு தனக்கு உபதேசித்த ஆசார்யன் திறத்திலும், அளவிடப்படாத அன்புடனும் அதிகாரியல்லாதாருடைய செவியிலே விழாத படியும்] அனுஸந்திக்கவேண்டும்.

வி (14) வாச்யனான எம்பெருமானுடைய பெருமையைக் காட்டிலும் வாசகத்தினுடைய பெருமை அதிகம் என்பது எத்தால் தெரிகிறது? இம்மந்த்ரத்தை பரிஹாஸமாகவாவது அடைவு தவறியாவது சொன்னால் பலன் கிடைக்குமா?

வி வாச்யனான எம்பெருமானுடைய மெருமையைக் காட்டிலும் வாசகத்தினுடைய பெருமை அதிகம் என்பதை திருவளபகியிடத்திலும் "பரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேளநமேவ வா, வைகுண்ட நாம க்ரஹணம் அசேஷாகஹரம் விது:" என்கிறபடியே எவ்விதமாகவாவது அடைவு தவறிச்சொன்னாலும் கார்யகரமா மென்பதை அஜாமிளனிடத்திலும் காட்டிற்று. வாசகம் ஸர்வபலன்களையும் அளிக்கு மென்பதைத் திருமங்கையாழ்வார்,

"குலந்தரும் செல்வம் தந்திடுமடியார்
படுதுயராயின வெல்லாம்
நிலந்தாளுஞ்செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினுமாயின செய்யும்
நலந்தருஞ்சொல்லை நான்
கண்டுகொண்டேன்நாராயணவென்னும்நாமம்"

என்று அருளினர்.

விளை (15) வேதவேதாங்கங்களுக்கும் திருமந்திரத்திற்கும் அர்த்தங்கள் எப்படி ஒன்றேயாகிறது?

விடை வேதங்கள் ஐந்து அர்த்தங்களையே முக்கியமாகப் பிரதிபாதிக்கின்றன:—பிராப்யனான எம்பெருமானுடைய ஸ்வரூபம், எம்பெருமானை அடைவதற்கு வேண்டிய உபாயத்தின் ஸ்வரூபம், அடைந்து பெறவேண்டிய பேற்றின் ஸ்வரூபம், அந்தப்பேற்றைப் பெறவொட்டாமல் செய்யும் ப்ரதிபந்தகத்தின் ஸ்வரூபம். "மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர்நிலையும், தக்கநெறியும் தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையுமோதும் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல்" என்றபடி திருவாய்மொழியும் இவைகளையே விவரிக்கிறது. திருமந்த்ரத்தில் ப்ரணவத்தாலே சேதனஸ்வரூபத்தையும், நமஸ்ஸாலே விரோதியினுடையவும், உபாயத்தினுடையவும் ஸ்வரூபத்தையும், நாராயண பதத்தாலே பரம புருஷனது ஸ்வரூபத்தை

யும், அதில் சதுர்த்தியாலே புருஷார்த்த ஸ்வரூபத்தையும் பிரதிபாதிக்கிறது. ஆகையால் அர்த்த பஞ்சகமே வேதங்களுக்கும், திருமந்திரத்திற்கும் உள்ளுறை.

வினா (16) நம்முன்னோர்கள் இம்மந்திரத்தைப் பற்றி விசேஷித்து என்ன சொல்லியிருக்கிறார்கள்?

விடை நம் பூர்வாசார்யர்களான ஆளவந்தார் எம்பெருமானார் முதலானோர் இம்மந்திரத்தின் பொருளை அறிவதற்கு முன்பு "அன்று நான் பிறந்திலேன்" என்றும் இதன்பொருளை நன்றாக உணர்ந்தபிறகு "பிறந்தபின் மறந்திலேன்" என்றும் சிலாகித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

வினா (17) ஸம்ஹிதாகாரம் அஸம்ஹிதாகாரம் என்னும் இரண்டு படிகள் எவ்விதம்?

விடை பிரணவத்தில் அ, உ, ம என்ற மூன்றும் மூன்று பதங்களாகவும் மூன்று அர்த்தங்களைத் தெரிவிக்கின்றன வென்பது அஸம்ஹிதாகாரம்.

"ஓமித்யேகாக்ஷரம்" என்றபடி பிரணவம் ஒரே எழுத்து, ஒரே பதம், ஒரே அர்த்தம் என்பது ஸம்ஹிதாகாரம்.

வினா (18) அ, உ, ம காரங்கள் எப்படி சேர்க்கப்பட்டவை? அவைகளின் பொருள்க ளென்ன?

விடை மூன்று தாழியிலே தாயிரைவைத்துக் கடைந்து வெண்ணெயை எடுத்து ஒன்றாகத்திரட்டினால் அது

மூன்று தாழிகளின் ஸாரமாகவிருப்பதுபோல் அ, உ, ம காரங்கள் "அகாரஞ்சா ப்யுகாரஞ்ச மகாரஞ்ச ப்ரஜாபதிः— வேதத்ரயாந்நிர ப்ருஹத் பூர்ப்புவஸ் ஸ்வரிதி ச" என்று சருதி ஸ்மருதிகளில் சொல்லுகிறபடியே ரிக், யஜுஸ் ஸாமவேதமான வேதத்ரயத்தில் நின்றும் தோன்றிச் சேர்க்கப்பட்டவை ஆகையினால் பிரணவம் மூன்று வேதங்களின் ஸாரம். "அ" என்பது எல்லா ஜகத்துக்கும் காரணமாய், எல்லார்க்கும் ரக்ஷகனாயிருக்கும் எம்பெருமானைச் சொல்லுகிறது. "உ" என்பது பெரிய பிராட்டிக்கும் சேஷபூதன் சேதனன் என்பதைக் காட்டுகிறது. அன்றி, வைதிகமர்யாதையாலே உகாரத்திற்கு அவதாரணம் அர்த்தமாகக் கொள்ளலாம். "ம" என்று ஞானச்ரயமான ஆத்மாவைச் சொல்லுகிறது.

விஞ (19) ரக்ஷ்யவர்க்கங்கள் எவை? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்களுக்கு எவ்வித ரக்ஷணையைக் கொடுக்கிறது?

விடை ரக்ஷ்யவர்க்கங்கள் மூன்று பிரிவு;—

1) ஸம்ஸாரிகள் தேஹாத்மாபிமானத்திற்கு மேற்பட்ட ஆத்மா உண்டென்று நினையாத பத்த ஸம்ஸாரிகள். இவர்களுக்கு தேஹாத்ம மனோவியாதிகளைப் போக்கி அன்னபானாதிகளைக் கொடுப்பது ரக்ஷணை.

2) முமுக்ஷுக்கள் "நலமந்தமில்லதோர் நாடு" புகவிரும்பி "தாவி யுலகங்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங்காலம் இன்னம் சிறுகாதே" என்று இருப்பவர்கள். இவர்களுக்கு

ஸம்ஸார பந்தத்தைப் போக்கி பரமபதப்ராப்தி பண்ணிவைப்பது ரக்ஷணை.

3) நித்யமுக்தர்கள் "ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை" செய்துகொண்டிருக்கும் நித்ய ஸூரிகளும், ஸம்ஸார பந்தமற்றுப் பரமபதம் சென்று சேர்ந்த முக்தர்களும். இவர்களுக்கு, எம்பெருமான் திருவடிகளில் தாங்கள் பண்ணிக்கொண்டுபோகிற கைங்கர்யத்திற்கு இடையூறு வராமல் தொடர்ச்சியாக கைங்கரிய வ்ருத்தியைக் கொடுப்பது ரக்ஷணை.

வி (20) சேதனனை ஒருபோதும் கைவிடாமல் நோக்கிக்கொண்டு போகிற பந்துயார்? ஔபாதிக பந்துக்களால் ரக்ஷணை முண்டாகுமா?

வி நிருபாதிகபந்துவான ஸர்வேச்வரன் ரக்ஷகன் ஔபாதிக பந்துக்களான மாதா, பிதா, புருஷன் முதலியவர்கள் ரக்ஷகராக மாட்டார்கள்.

வி 21 ஔபாதிக பந்துக்கள் ரக்ஷகராகமாட்டார்கள் என்பதற்கு புராண ப்ரமாணம் ஏதாவது உண்டா?

வி புராணப்ரமாணம் அனேகமிருக்கின்றன. (ப்ரபக்த பரித்ராணம் பார்க்க.)

பரித்ராக்கள் ரக்ஷகரல்லர் என்பதற்கு உதாஹரணம் தர்ம புத்ரர், நளன்.

ப்ரதாக்கள் ரக்ஷகரல்லர் என்பதற்கு உதாஹரணம் வாலி இராவணன்.

மாதாபிதா ரக்ஷகர்கள் என்பதற்கு கைகேசி, இரண்ய கசிபு.

புத்ரர்கள் ரக்ஷகர்கள் என்பதற்கு உதாஹரணம் ருத்ரன், கம்ஸன்.

சக்ரவர்த்திகள் இரண்யாவணிகள்களில்சப்பட்டு இழிதாழில் செய்தகிலை ரக்ஷணம் அவர்களால் முடியாது.

ப்ரஹ்மா சிருஷ்டிகர்த்தாவாக விருந்தபோதிலும், ரக்ஷண சக்தி இல்லாதகிலை மதுகைடபர்களிடம் வேதங்களைப் பறிகொடுத்தார். பிள்ளையான ருத்ரனல் தலையறுப்புண்டார்.

ருத்ரனுக்கு பிதாவைத் தலையறுத்தகிலை ரக்ஷகத்வமில்லை. இந்த தோஷத்திலேயே பாணாசுரனுக்கு ரக்ஷிப்பதாக அபயம் கொடுத்திருந்தும் அதன்படி ஸ்ரீகிருஷ்ணனுடன் பூதகணைக்களோடு யுத்தத்திற்கு வந்தும் அவனை ரக்ஷிக்க முடியாமல்போய்விட்டது. "மாயப்பொருபடைவாணனை ஆயிரக் தோளும் பொழிகுருதிபாய, சுழற்றிய ஆழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே" என்று பெரியாழ்வார் மங்களாசாஸனம் செய்கிறார். ஆகையினல் ஸ்ரீமந்நாராயணனுக்கே ரக்ஷகத்வம் ஏற்கும்.

வினா (22) எம்பெருமான் தானே ரக்ஷிக்கிறானா? அல்லது துணையுண்டா?

விடை காருண்யமே வடிவெடுத்தவளான பிராட்டியோடு கூடவே எம்பெருமான் ரக்ஷித்தருளுகிறான்.

வினா (23) பிராட்டியின் நன்மைஎப்படிப்பட்டது

விடை உலகத்திற்கு மாதாவாகவிருக்கும் பிராட்டி தன் கணவனைப்பற்ற தான் அடியுமளாயும் தன் குழந்தைகளாகிற சேதனர்களை ரக்ஷிக்க தான் தலைவியாயுமிருக்கிறாள். ஸூர்யனும் ஸூர்யப்ரபை யும்போலவும். பூவும் மணமும்போலவும் பிரிக்கமுடி யாதது. ஆகையினால் இவர்களைச் சேரப்பற்ற வேண்டும்.

வினா (24) அன்ய சேஷத்வத்தின் கதி என்ன? ஆத்மஸ்வரூபம் எப்படி?

விடை சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம், அப்படி யிலலையென்றால் ஆத்ம ஸ்வதந்திரம் உண்டாகி ஆத்மாபஹாரக்ஷமை ஏற்படுகிறது. சேஷத்வம் லுப்த சதுர்த்தியினால் "அ"கார வாச்யனான எம் பெருமான் விஷயத்தில் மாத்திரமே; அதாவது மிகச்சொடியதான அன்ய சேஷத்வமில்லாமலிருக்க வேண்டும். இதைத் திருமழிசைப் பிரான் வெகு அழகாக அருளிச்செய்கிறார். ஸ்ரீ விஷ்ணுபுராணத் தில் * ஸ்வபுருஷ மபிவீக்ஷ்ய * இத்யாதியாகவுள்ள ச்லோகத்தை அவ்வாழ்வார் மொழிபெயர்க்கும் பொது "திருவடி தன்காமம் மறந்தும் புறந்தொழா மாந்தரை" என்கிறார். ஸ்வாமியான எம்பெருமா னுடைய திருநாமத்தை மறந்திருக்காலுமிருக்கலாம் புறந்தொழுகை(அன்யசேஷத்வம்) ஆகாது. ஒருத்தி, தன் கணவனிடத்தில் அன்புகொள்ளாதிருக்கினு மிருக்கலாம்; காலடைவில் ஆனுகூல்யம் ஏற்படக் கூடும். வேறு புருஷனிடத்தில் அன்புகொண்டால் அவத்யமேயாகும். இதைப்பற்றியே ப்ராணவத்தில்

சேஷத்வத்தை முன்பு சொல்லி பின்னை ஆத்மாவை ச்சொல்லியிருக்கிறது. இப்படியதார்த்தி முற்பட்டு மகாரம் பிற்பட்டிருப்பது காண்க.

வி (25) ரணவத்தாலே தெரிந்துகொண்டது என்னென்ன ?

வி ரக்ஷகவஸ்துவும், ரக்ஷ்யவஸ்துவும், ரக்ஷணேஹேதுவும், ரக்ஷணப்ரயோஜனமுமாகிற நான்கும்தெரிந்து கொள்ளப்பட்டன.

வி (26) நமஸ்ஸின் பதங்கள்என்ன? அவைகள் எதைக்காட்டுகின்றன ?

வி "ந" என்றும் "ம:" என்றும் இரண்டுபதங்கள். "ம:" என்பது எனக்கு நான் உரியன் என்று சொல்லுகிறது. "ந" என்பது அதைக்கழித்து தனக்கும் பிறர்க்கும் நான் உரியனல்லேன் என் பதைக்காட்டுகிறது. அந்யசேஷத்வ நிவ்ருத்தியைக் காட்டிலும் ஸ்வஸ்வாதந்திரிய நிவ்ருத்தியே மிகவும் முக்கியமானதால் நமஸ்ஸில் அதுசெய்யப்படுகிறது.

வி (27) நமஸ்ஸு எந்த விரோதிகளைக் கழிக்கிறது ?

வி ஸ்வரூப, உபாய, ப்ராப்யவிரோதிகளாகிய மூன்றையும் கழிக்கிறது. அதாவது சேஷத்வமாகிற ஸ்வரூபத்திற்கு விரோதியாகிற அஹங்கார மமகாராதிகளையும், எம்பெருமான் கையையே பார்த்திருக்கையாகிற உபாயத்திற்கு விரோதியான, ஸ்வரக்ஷணத்தில் அந்வயத்தையும், பகவத்கைங்கரியமாகிற புருஷார்த்தத்திற்கு விரோதியான ஸ்வ

போக்யதாபுத்தியையும் நிவர்த்திப்பித்து "யானே நீ என்னுடைமையும் நீயே" "களைவாய் தன்பம் களையாதொழிவாய் களை கண்மற்றிலேன்" "மற்ற நம் காமங்கள் மாற்று" என்றிருக்கும்படிசெய்கிறது.

வினா (28) பகவத்சேஷத்வத்திற்கு எல்லை நிலமெது? அது எதிலிருந்துகிடைக்கிறது?

விடை பகவத்சேஷத்வத்திற்கு எல்லை நிலம், பாகவத சேஷத்வமே. இதற்குத் திருமங்கை மன்னனுடைய அருளிச்செயலே பிரமாணம். ["மற்றுமோர் தெய்வமுளதென்றிருப்பாரோடுற்றிலேன், உற்றது முன்னடியார்க்கடிமை, மற்றெல்லாம் பேசிலும் நின்திருவெட்டெழுத்துங்கற்று நான் கண்ணபுரத்தமரையம்மானே"] இந்த பாகவத சேஷத்வம் லாகூர்த்சப்தத்திலிருந்து கிடைக்காமல் அர்த்தபலத்தாலே கிடைக்கிறது.

வினா (29) அத்யந்த பாரதந்த்ரியவுணர்ச்சி எப்படி இருக்கவேண்டும்?

விடை அநுபவகைசயில் எம்பெருமான் தலை தடுமாறுகப் பரிமாறுகிற ஸமயத்திலும் "செய்த்தலையெழு நாற்றுப்போல் அவன்செய்வன செய்துகொள்ள" என்று அப்படிப்பட்ட போகத்தை அழிக்காமலிருக்கவேண்டும். அதாவது "தனக்கேயாக எனைக்கொள்ள வேண்டும்" என்கிற அத்யந்த பாரதந்த்ரிய வுணர்ச்சியைப் பெற்றவனாக ஆதல்வேண்டும்.

வினா (30) நாராயணனென்கிற திருநாமத்திற்குள்ள இரண்டுவித ஸமாஸங்களின்

விவரம் என்ன? இந்த ஸமாஸங்கள் எம்பெருமானுடைய எத்தெத்த குண விசேஷங்களைக் காட்டுகின்றன? எம்பெருமான் உபாயமாகவும் உபேயமாகவும் இருக்கிறான் என்பது எப்படித்தெரிகிறது?

விடை (1) "காராணாம் அயகம் காராயண:" என்பது தத்புருஷ ஸமாஸம்.

(2) "காரா: அயகம் யஸ்ய ஸ:" என்பது பஹுவ்ரீஹி ஸமாஸம்.

(1) தத்புருஷஸமாஸம் "ஒருகாலும் உத்பத்தி விநாசமில்லாத ஸ்வரூபநித்யங்களெனப்படும் வஸ்துக்களினுடையவும், உத்பத்தி விநாசங்கள் இருக்கச் செய்தேயும் முன்புண்டான காமரூபலிங்காதிகள் மாறுமலிருக்கப்பெற்ற ப்ராவாஹ நித்யங்களெனப்படும் வஸ்துக்களினுடையவுமான பகவத்ஸ்வரூப நிரூபகதர்மங்களான "ஞான ஆனந்த அமலத்வ அசங்கதத்வங்கள், நிருபாதிஸ்வரூப விசேஷணங்களாகையாலே பல ஜகத்காரண வஸ்துக்களுக்கும் பொதுவாயிருக்கிற ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வ ஸௌலப்ய முதலிய ஸாதாரண குண விசேஷங்கள், அஸாதாரண திவ்ய மங்களவிக்ரஹம், இச்சையினால் பரிக்ரஹித்தும் பல விதவிக்ரஹங்கள் அந்த விக்ரஹகுணங்களான ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய லாவண்ய யௌவனாதி குணங்கள், அத்திருமேனிக்குச்சாத்தும் எண்ணிறந்த திருவாபரணங்கள், அழகுக்கும் அடியவர் விரோதிகளைக்கும் உடலாயிருந்துள்ள திவ்யாயுத

விசேஷங்கள், பெரிய பிராட்டியார் முதலான நாச்சிமார்கள், அனந்த கருட விஷ்வக்ஸேனாதிகளான நித்ய ஸூரிவர்க்கங்கள், கைங்கரியத்திற்கு உபகரணங்களான குடை, சாமரம், திருவாலவட்டம் வட்டில் படிக்கம் முதலானவை, சண்டப்ரசண்ட பத்ரஸுபத்ர ஜயவிஜயாதிகளான திருவாசல் காக்கும் முதலிகள் குமுதகுமுதாக்ஷர்முதலான கணாதிபதிகள், ஸம்ஸார ஸாகரத்தைக்கடந்து அக்கரைப்பட்ட முக்தர்கள், பரமபதம், மூலப்ரக்ருதி இந்தப்ரக்ருதிக்குள்ளே உருமாய்ந்து கிடக்கிற ஸம்ஸாரிகளான ஆத்மாக்கள், பகல் இரவு முதலிய பாகுபாடுகளுடன் கூடினகாலம், மஹத்தத்வம், மூலப்ரக்ருதியளவாக வண்டான இருபத்து மூன்று தத்வம், அண்ட விசேஷங்கள், அண்டத்துக்குட்பட்ட தேவ மனுஷ்ய திர்யக் ஸ்தாவரவிசேஷங்கள் இவைகளின் திரள்களான நாசங்களுக்கு இருப்பிடமானவன் நாராயணன்"

(2) பஹுவ்ரீஹிஸமாஸம் மேலே சொல்லப்பட்ட நாசங்களாகிற நித்யவஸ்துக்களை தனக்குள்ளேயே வைத்துக்கொண்டிருக்கிற நாராயணன்.

தத்புருஷஸமாஸத்தினால் பரத்வத்தையும் பஹுவ்ரீஹிஸமாஸத்தினால் ஸௌலப்யத்தையும் காட்டுகின்றன. இப்படி பரத்வஸௌலப்யங்களையும் தனிநாசங்களிலேதானிருக்கிறான் என்பதினால் அந்தர்யாமித்வமும், "ஈயதே ஆதேந இதி அயநம்" என்கிறகாரணவ்யுத்பத்தியினால் எம்பெருமான் உபாயமாக நிற்பவனென்றும் "ஈயதே அஸௌ இதி

அயகம்" என்கிற கர்மணி வ்யுத்பத்தியினால் எம் பெருமான் உபேயமாக நிற்பவனென்றும் காட்டிற்று, இதனாலேயே திருமங்கை யாழ்வார் "எம் பிராணனேந்தை யென்னுடைச்சுற்ற மெனக்கா சென்னுடைவாணாள்" என்று ஸகலவித பந்துத்வத்தையும் அருளிச்செய்தார்.

அதனால் இராமட மூட்டுவானைப்போலே எம் பெருமானும் தன் பக்கலில் தலைசாய்க்கமாட்டோ மென்று ஸ்வாதந்த்ரியம் கொண்டாடித்திரிகிற சேதனர்கள் கண்காணுதபடி அந்தராத்மாவாய் இவர்கள் ஸத்தையே பிடித்து ரக்ஷித்துக்கொண்டுபோகிறான்.

வினா (31) ஸ்த்ரீ புருஷனுக்கு அநந்யார்ஹை என்பதும் சேதநன் எம்பெருமானுக்கு அநந்யார்ஹன் என்பதும் எப்படி ஏற்படுகின்றன? எம்பெருமானுக்கு அநந்யார்ஹன் என்பதின் ஸ்வரூபம் என்ன?

விடை ஸ்த்ரீகள் பதினாறைமையாய் இரண்டு சரடாயிருக்கும் மங்கள ஸூத்ரம் தரிப்பது புருஷனுக்கு அநந்யார்ஹை என்பதைக்காட்டுகிறது.

எட்டிழையாய் மூன்று சரடாயிருக்கும் திருமந்திரத்தை மங்கள ஸூத்ரமாக தரித்ததும் எம் பெருமானுக்கு அநந்யார்ஹனாகிறான்.

"ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னிவழுவிலா வடிமை செய்யவேண்டும் நாம்" என்றபடி எல்லாக் காலங்களிலும் எல்லாதேசங்களிலும் எல்லா அவஸ்தைகளிலும் பிரியாது நின்று கைங்கரியம்

பண்ணப்பெறுவது எம்பெருமானுக்கு அங்யார் ஹன் என்பது.

(இனி த்வயப்ரகரணம்)

வினை (32) த்வயத்திற்கு மறுபெயர் என்ன? ஆசார்யர்கள் திருமந்திரத்தைக் காட்டிலும் த்வயத்தில் அதிகமாக ஊன்றிப் போரக் காரணம்என்ன?

விடை த்வயம் மந்த்ர ரத்னம் என்று பிரஸித்திபெற்றது ப்ரபந்நருக்கு த்வய ரஹஸ்யம் அத்யாவச்யகமானது. ஏனெனில் திருமந்த்ரமும் சரமச்லோகமும் ஸர்வாதிகாரமான உபநிஷத்திலும் பாரதத்திலும் ப்ரதிபாதிக்கப்படுகிறதினாலும் த்வயாதிகாரிகளல்லாதவர்கள் அநுஸந்திப்பதினாலும், த்வயரஹஸ்யம் மற்ற ரஹஸ்யங்களைப்போல் லோகிகபூமியில் உபதேசிக்கப்படாமல் பரமபதத்திலே பெரிய பிராட்டிக்கு உபதேசிக்கப்பட்டு விஷ்வக்ஸேநர் மூலமாய் உபதேசபரம்பராப்ராப்தமாய் வந்ததாலும், ஆளவந்தார் ஸ்தோத்ரத்தை ஸ்தோத்ரரத்நம் என்பது போலவும், விஷ்ணுபுராணத்தை புராணரத்நம் என்பதுபோலவும், மேலும் திருமந்த்ரத்திலும், சரமச்லோகத்திலும் பிராட்டி ஸம்பந்தம் ஆர்த்தமாக ஏற்படுவதினாலும், த்வயத்தில் அந்த ஸம்பந்தம் சாப்தமாகவே ஏற்படுவதினாலும், நம்மாழ்வாருக்கு விஷ்வக்ஸேனரால் உபதேசிக்கப்பட்டதை "உயர்வற வுயர்நல" மென்று த்வயார்த்த ப்ரதிபாதகமாக ப்ரபந்தத்தை ப்ராரம்பித்தபடியினாலும் இம்மந்த்ரத்திற்கு மந்த்ரரத்னமென்று பெரியோர்கள் ஸாதிப்பதில் தட்டில்லை.

வினா (33) வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யமான விஷயங்கள் என்னென்ன?

விடை பாற்ற விஷய ஸங்கங்களையெல்லாம் மறுவலிடாதபடி ஸ்வாஸநமாகவிடுகை.

(2) வேறொன்று தஞ்சமென்ற நினைவு வராதபடி நிருபாதிக சரணரான ஸர்வேச்வரனையே தஞ்சமாகப்பற்றுதல்.

(3) நாம் செய்யும் பாபங்கள் அளவுகடந்திருப்பதை நினைத்து பிரமிக்காமல் பலன் தப்பாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனிருக்கை.

(4) பேறுகிடைக்கும்போது கிடைக்கட்டும் என்றிராமல் "மாகலைகுந்தம் காண்பதற்கு என் மனமேகமெண்ணும்" என்றபடி பதறுகை.

(5) இவ்வுடம்போடு கூடியிருக்கும் காலத்தில் அநேக திவ்யதேசங்களில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஸேவித்தும் அவனுடைய கல்யாண குணானுபவம் செய்துகொண்டும் அவனுக்குக்கைங்கரியம் செய்துகொண்டுமிருக்கை.

(6) திருச்சொன்ன லக்ஷணங்களையுடைய ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால் அவர்கள் வைபவத்தைப்பாடி ஆனந்தப்படுகை.

(7) திருமந்திரத்திலும் த்வயத்திலும் நிஷ்டையிருக்கை.

(8) திருச்சொன்னவற்றை உபதேசித்த ஆசார்யன் விஷயத்தில் பக்தியோடிருக்கை.

(9) நித்யஸூரிகள் பெரும்பேற்றை அடையும்படி செய்த ஆசார்யனிடத்திலும் அந்த ஆசார்ய ஸம்பந்தத்தை உண்டாக்கின எம்பெருமானிடத்திலும் எப்பொழுதும் கன்றி பாராட்டுதல்.

(10) கீழ்ச்சொன்ன விஷயங்கள் தன்னிடத்தில் விருத்தியாவதற்கு ஜ்ஞான விரக்தி சாந்தி ஸம்பந்தனுப் பரம ஸாத்விகனுயிருப்பானெரு பாகவதனுடன் ஸஹவாஸம் செய்கை.

வி (34) திருமந்திரத்திலும், த்வயத்திலும், சரமச்லோகத்திலும் அடையும் பேற்றுக்கு வித்யாசம் என்ன? கைங்கர்யத்தை அடையவேண்டியதற்கு ஹேதனங்கள் எவை? அவைகளில் முக்கியமானது எது?

வி திருமந்த்ரத்தில் ஸ்வரூபத்திலிருந்து சைவாங்கின ஆத்மாவாலே புருஷார்த்தலாபம் கிடைக்கிறதென்பது.

ஈச்வரனுடைய லக்ஷ்மீ விசிஷ்டவேஷத்தில் நோக்கான த்வயத்தில் விசேஷணபூதையான பெரிய பிராட்டியாலே புருஷார்த்த லாபம் கிடைக்கிறதென்பது.

இவன் பண்ணும் ஸ்வீகாரமும் அனுபாயமாம்படி கைக்கொண்டு ரக்ஷிக்கும் நிரங்குச ஸ்வதந்திரனன ஈச்வரனுலே பேறென்கிறது சரமச்லோகத்தில்.

எம்பெருமானுடைய நித்ய கைங்கர்யத்தையடைய தேஹமும், ஆத்மா, ஈச்வரன் பிராட்டி எல்லாம்

வேண்டும். ஆனால் முக்கியமாகவேண்டியது பிராட்டி அதையே த்வயம் தெரிவிக்கிறது. அதனாலேயே த்வயம் மிகச்சிறந்தது.

வினா (35) நித்யகைங்கர்யத்தை அடைய முக்கியமென்று த்வயத்தினால் தெரிவிக்கிற பிராட்டி விசேஷணபூதையென்பது எப்படி விளங்குகிறது.

விடை த்வயார்த்த ப்ரதிபாதகமான திருவாய்மொழியில் "அகலகில்லேன்" என்கிற பாசுர வியாக்யானத்தில் ஈட்டில் ஐதிஹ்யம். ஒருநாள் பட்டர் பிள்ளை யழகிய மணவாளரையர்க்கு த்வயம் அருளிச்செய்கைக்காக "எல்லோரும் போங்கோள்" என்ன நஞ்சீயரும் எழுந்திருந்தபோய். "நம்மை இராய்" என்று அருளிச்செய்திலர் என்று வெறுத்திருக்க அப்போதே "ஜீயர் எங்குத்தார்" என்று கேட்டருளித்தேடி அழைத்துக் கூடவைத்துக்கொண்டு இருந்து த்வயத்தை அருளிச்செய்யாநிற்கச்செய்தே "அப்போதருளிச்செய்த வார்த்தை என்று ஜீயர் அருளிச்செய்வர். இவ்வாத்மவஸ்து சேஷமாகில் அவன் சேஷியாகில் இங்கு பிராட்டி ஸம்பந்தத்தால் செய்கிறதென்ன" என்று கேட்க, "அதிருக்கிறபடிகேளீர்; ராவணனுக்கும் காகத்திற்கும் அனுஷ்டானம் ஒத்திருக்க இனி ராவணன் சாபத்தாலே கிட்டமாட்டாதே இருப்பதொன்றுண்டிறே. அங்ஙனன்றிக்கே ஜனனி பக்கல் அபராதத்தில் கைதொடலுமிருக்க, தலைகொண்டு தப்பினானிறே அவள் ஸங்கிதி உண்டாகையாலே; அவள் கடக்கவிருக்கை

யாலே ராவணன் நலியறுப்புண்டான். போக் கற்றுச் செயல் மாண்டு நின்ற நிலை அவனுக்கு ஒக்குமிறே; இக்கனே இருக்கச் செய்தேயும் காரியமாயிற்றில்லையிறே அவனுக்கு பிராட்டி ஸம் நிதி இல்லாமையாலே * * * * "உத்தரார்த் தத்தில் அவனோடு ஒப்புச்சொல்லி பூர்வார்த்தத் தில் புருஷகாரமாகை யாகிற நிர்மையில் ஏற்றம் சொல்லுகிறது. தொட்டாரைத் தொட்டு (அதா வது அவன் பக்கலில் மன்னுகிறதைத் தவிர அவனோடு சம்பந்தப்பட்ட விடத்திலும் மன்னுக கை) "ந கச்சிந்காபராத்யதி" என்னக்கடவ விவள் "நம்மை ஒரு கார்யத்திலே எப்போது ஏவு வளோ?" என்று அவஸர ப்ரதீக்ஷனையிருக்கு மவனைப் பெற்றால் விடாளிறே. தன்வார்த்தை கே ளாதார்க்கும் கூட * மித்ரமௌபயிகம் கர்த்தும் * என்னக்கடவவிவள் தன் முகம் பார்த்து வார்த்தை கேட்குமவனைப் பெற்றால் விடாளிறே. திருவடி ராக்ஷஸிகளைத் தன் கையிலே காட்டித்தரவேணு மென்ன "பிறர் கண்குழிவு காணமாட்டாத தூய்ப் பலிகரண் நான்" என்னுளிறே. ராவணன் தொ லைந்து பெருமாளும் விஜயிகளாஞர் என்று பெரிய ப்ரியத்தை பிராட்டிக்குத் திருவடி விண்ணப்பம் செய்ய, பிராட்டியும் ப்ரிதிப்ரகர்ஷத்தாலே விம் மல் பொருமலாய் ஸ்தப்தையாயிருக்க இவனும் விக்கலுக்கு வெம்மாற்றம்போலே (அதாவது–பயங் கரவார்த்தை விக்கலே நிறுத்துவதுபோலே) பெரிய ப்ரியத்தை வந்து விண்ணப்பம் செய்த எனக்கு ஒரு மாற்றம் சொல்லாதே தேவரீர் எழுந்தருளி

யிருக்கிற விருப்பு என்ன" என்று திருவடி விண்ணப்பம் செய்ய, பிராட்டியும் "உனக்கு லக்ருசமாகத்தரலாவதொன்றில்லாமை காண் நான் பேசாதிருந்தது" என்ன, இவனும் இவ்வளவிலே நம் அபேக்ஷிதத்தை விண்ணப்பம் செய்துகொள்ளவேணும் என்று பார்த்து, "தேவரீரைச் சுற்றும் முற்றும் கலிந்த ராக்ஷஸிகளையே ராவணனுக்கு முன்பே கொல்லவேண்டியிருந்தது; அவனும்கூட இவர்களோபாதி கேடனல்லன். இவர்களிப்போது பாம்பு படமடங்கினப்போலே யிருக்கிறார்கள். இவர்களை சித்ரவதமாக ஹிம்ஸிக்கப் பாராநின்றேன்; கையாலே குத்தியும் காலாலே துகைத்தும் நகங்களாலே சாடித்தும் பற்களாலே கடித்தும் துண்டித்தும் பெருமாள் திருச்சங்கள் செய்தகெல்லாம் நானே பண்ணப் பாராநின்றேன்; பகவதபசாரிகளையும் பாகவதாபசாரிகளையும் தண்டிக்கும் க்ரமத்திலே தண்டிக்கக் கோலாநின்றேன். முன்பு வந்தபோது இடமில்லாமை விட்டுப்போனேனித்தனை; இப்போது எனக்கெல்லாப்ரத்யுபகாரங்களும் பண்ணியருளித்றுகலாம்—இங்ஙனே திருவுள்ளமாகவேண்டும்" என்றான். அதற்குப் பிராட்டி அருளிச்செய்கிறாள் [பாபாநாம் வா சுபாநாம் வா] இவர்கள் நீ நினைத்திருக்கிறபடியே பாபைகளாகவுமாம். நான் நினைத்திருக்கிறபடியே சுபைகளாகவுமாம். அது நானென்றோ உத்தேச்யம். அழுக்குடையவனென்றோ குளிக்கப்ராப்தியுடையான். அவர்கள் பாபைகளாகிலென்றோ நாம் முகம் கொடுக்க வேண்டுவது; சுபைகளாகில் உன்

வால் வேண்டுமோ. அவர்கள் புண்யங்களே அவர் களுக்கு கைகொடுக்குமே. கைம்முதல் இல்லாதார்க் கன்றே நாம் கைம்முதலாக வேண்டுவதென்றுள். [வதார்ஹாணும்] தண்டிப்பவரை தண்டிக்கவும் அல்லாதாரைத் தண்டிக்கவும் சொல்லுகிற தர்ம சாஸ்த் ரம் தேவரைத் தொற்றிக் கிழித்துப் போகடக்கட வதே வென்ன, ஆரேனுமாக சரணாகதரை ரக்ஷிக் கக் கடவதென்கிற விசேஷ சாஸ்த்ரம் உன்னைத் தொற்றிக்கிழித்துப் போகடக் கடவதே வென்கி றுள். சரணம் என்று வந்தவிபீஷணழ்வான் தோஷ வானேயாகிலும் (நக்யமேயம்) என்று கடற்கரை யில் பெருமாள் சொன்னவார்த்தை கடலோசையா கச்சுடவதே வென்கிறுள். [ப்லவங்கம!] பின்னை யும் இவன் புத்திரியவிடாமையினுலே 'ஹரி ஹரி' என்கிறுள்.— நச்சினத்தை நச்சும் ஜாதியானமை கண்டோமே யென்கிறுள். வஸிஷ்டாதிகள் மந்தி ரிக்கும் குடியான இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தா யல்லை; யோகிளான ஜனககுலத்தில் பிறந்தாயல்லை காட்டிலே பணையோடு பணைதத்திக்திரிகிற ஜாதி யில் பிறந்தது. அவ்வினத்தாற்கு சரணாகதி ரஹஸ் யாதம் தெரியாதிறே என்கிறுள். ராஜாக்களுமாய் மூலையடியேகடக்க உரியருமாயிருக்கிற பெருமாளும் எங்கள்முன்னிதசீன கோபித்தறியார். நீ வானர ஜாதியாயிருந்துவைத்து இங்ஙன் கோபிக்கக் கட வையோ? [கார்யம் கருணமார்யேண.] இவர்கள் புண்ய பாபம் கிடக்க இப்போது ஓடுகிற தயநீய தசையைப் பாராய். "உன் கையிலே அகப்பட்டு நாம் என்படக்கடவோம்" என்று இயங்குகிறபடி

பாராய். இவர்களுக்கு வேறு சகாக்களில்லையே. இப்போது இவ்வளவில் நாம் இரக்கவேணுங்காண்; [ஆர்யேண] இவையெல்லாம் இப்போது நான் கற்பிக்கவேண்டும்படியாயிற்றே உனக்கு [ஆர்யேண] ஐக்ஷ்வர்யாகரண பண்டிதனென்பது பொய்யோ. அவையுமெல்லாம் கற்றுக்கேட்டிருக்கச் செய்தேயும் இப்போது ராமகோஷ்டியில் பரிசயம் பின்னுடினபடியாகாதே. அக்கோஷ்டியில் பழக்கமிருந்து இங்ஙன் சொல்லவல்லையாயிற்று. நான் வந்து சேர்ந்தபிறகு அக்கோஷ்டி இங்கனே நீரஸமாயிற்றே. [சுச்சிந்நாபராத்யதி] ஸம்ஸாரத்தில் குற்றமில்லாதார் திரை நீக்கிக் கடலாடப் போமோ? பெருமாள் தான் குற்றவாளியல்லரோ நான்தான் குற்றவாளியல்லேனோ? நீதான் குற்றவாளனல்லையோ. பெருமாள் குற்றவாளரானபடி எங்கனே யென்னில்; தாம் காடேறப் போந்தார்; அவர் பின்னே மடலூரு வாரைப்போலே இளைய பெருமாளும் போந்தார். தம்மோடே ஏகாந்தபோகம் பண்ணக்கடவதாக இலையகலப்படுத்திக்கொண்டு நானும் போந்தேன். என்னைப் பிரிந்து பத்து மாதமிருந்தார். தான் வாராவிட்டால் தம்மதோரம்பு செய்யமாட்டாமையில்லையிறே. இவ்வழி இத்தனை நாள் பிரிந்திருக்கவல்லராகாபோதே பெருமாள் பக்கலிலே அன்றே குற்றம். பாரதந்த்ர்யத்திற்கு அநுகுணமாகப் பேசாதிராதே அது தன்னைச் சொன்னவென் பக்கலுமுள்ளதன்றே குற்றம். இனி ப்ரபு (ராவணன்) சொன்னகார்யம் செய்தவடியாரை தண்டிக்கப்பார்த்தவன்று பெருமாளருளிச் செய்த கார்யம் செய்யப்போந்த உன்னை முற்பட தண்டித்துக் கொண்டன்றே ராவணன் சொன்ன

கார்யம் செய்த இவர்களை தண்டிப்பது. ஆசையால் நீயல்லவோ குற்றவாளன். எல்லாப்படியாலும் பெருமாளொரு விஷயத்தைமுந்தினவன்று ஆரவிடுகைக்கு காணுண்டு. காலும் அவர்வழி போகவேண்டியிருக்கவன்றைக்கு நீயுண்டு என்றிருந்தேன். [அநுகிக்ரமணியம் ஹி சரணக்ராஹணம்] என்னு நின்றார்களன்றோ. நீயும் இங்ஙனே யாலல் அபராதம் செய்தார்க்குப் புகுவாசலுண்டோ வென்கிறாள். இவள் உபதேசத்தாலே திருவடியைப் பொறுப்பித்தாளென்கிற ஸ்ரீராமாயண ப்ரஸித்தியே பிராட்டியின் புருஷகார அவச்யத்தைத் தெரிவிக்கிறது.

வினா (36) ஸித்தோபாய வரணத்தைக் கூறும் த்வய ரஹஸ்யத்திற்கு அதிகாரி எப்படி இருக்கவேண்டும்.

விடை ஆகிஞ்சன்யமும் அதாவது "நோற்ற நோன்பிலேன் துண்ணறிவிலேன்" என்கிறபடி ஒருவித கைப்முதலுமில்லாமலும், அநந்ய கதித்வமும் (அதாவது) "புகலொன்றில்லாவடியேன்" 'கலைசண்மற்றிலேன்' என்கிறபடி வேறு ரக்ஷகனை நெஞ்சிலும் நினையாமலும் இருக்கின்ற அதிகாரியாக விருக்கவேண்டும்.

வினா (37) பெரியபிராட்டியைக் கொண்டே எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றவேண்டுமாசையால் அப்பெரியபிராட்டியின் புருஷகாரம் எப்படிப்பட்டது?

விடை பெரியபிராட்டி சேதன விஷயத்தில் சேஷித்வத்தையும் ஈச்வரவிஷயத்தில் சேஷித்வத்தையும்

உடையவள். எம்பெருமானுக்கு உபாயத்வம் உபேயத்வம் என்கிற இரண்டு தன்மைகள் உண்டானாப் போல் இவளுக்கு புருஷகாரமும் உபேயத்வமுமாகிற இரண்டு தன்மைகளுமுண்டு "அகில ஜகன்மாதரம்" என்கிறபடி சேதநர்களுக்கு மாதாவாய் அதனால் அவர்கள் வருத்தத்தைக் கண்டு பொறுக்கமாட்டாத தன்மையும், எம்பெருமானுக்குப் பத்னியாய் "பித்தர் பனிமலர்மேல்பாவைக்கு" என்கிறபடி தன் வைலக்ஷண்யத்தைக் கண்டு பிச்சேறித்தன் சொற்படி கடக்கும்படி அபிமதவிஷயமாயிருக்கிறவொரு தன்மையும் உடையவளாகையால் ஒரு வகையிலும் விபலமாகமாட்டாத புருஷகாரம். இதனாலேயே ஸ்ரீ ராமாயணத்தில் "மாயாம்ருகத்தின் பின்னேபோ" என்றதும் விளவதறியாதே போனது. கீழே சொன்னபடி திருவடியைப் பொறுப்பித்தது அதாவது ப்ராப்தஸாதனத்தின்மேல் பொறுப்பலுகிய ஈச்வரனைக் காட்டிலும் ப்ராப்தனேயில்லாமலே பொறுப்பிக்கும் குண விசிஷ்டை. அதனால் அபராதங்களைக் கணக்கிட்டு தண்டிக்கவல்லனான ஈச்வரனிடத்தில் அதனைத்தையும், சேதனர் செய்யும் குற்றங்களின் அளவில்லாமையையும் கண்டு "ஐயோ என்னுகிறோம்" என்கிற பயத்தால் ஈச்வரனை விட்டு இறைப்பொழுதும் அகலுவதில்லை. அவளை ஆச்ரயித்த சமயப்ரதிஜ்ஞை வேண்டியதில்லை. ஆச்ரயிக்கவேண்டுமென்கிற ருசி பிறக்கவேண்டுவதத்தனையே.

வினா (38) எம்பெருமான் திருவடிகளின் சிறப்பு எப்படிப்பட்டது?

விடை புருஷகாரமாகச் சொல்லப்பட்ட பிராட்டியும் ரக்ஷகனுகச் சொல்லப்பட்ட எம்பெருமானும்கூட கைவிட்டாலும் நிருவடிகள் கைவிடமாட்டா "வண் புகழ் நாரணன் இண்கழல்" என்கிறபடி பற்றினுரை ஒருநாளும் கழுவவிடாத திறமையுடையன அதுபற்றியே குலசேகரப்பெருமாளும்

"கருதுபரம் தடாயேல் உன்சரணல்லால் சரணில்லை
விரைகுழலும் மலர்ப்பொழில்சூழ் விற்றுவக் கோட்டம்மா
அரசினைத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன் [னே
அருள் நினைந்தேயழும் குழவியதே போன்றிருந்தேனே"
என்கிறார்.

வினா (39) த்வயத்தில் "சரணம்"; என்பது இஷ்டத்தைப் பெறுகைக்கும் அநிஷ்டத்தைத் தவிர்க்கைக்கும் உபாயம். இஷ்டங்கள் அனிஷ்டங்கள் என்பவை யாவை?

விடை அர்ச்சிராதிமார்க்கத்தில் செல்லுகையும் பரமபதத்தை அடைகையும், பரமபுருஷனைக் காண்கையும், குணானுபவகைங்கரியங்களுமாகிய இவை இஷ்டங்கள்; அவித்யை, அதனடியாகவரும் ராகத்வேஷங்கள் புண்ய பாபரூபகர்மங்கள் அவற்றின் பயனான தேவாதி சரீரங்கள் பலவகைப்பட்ட துக்கபரம்பரைகள் ஆகிய இவை அநிஷ்டங்கள்.

வினா (40) த்வயத்தில் "நாராயணன்" என்ற பதத்தினால் என்ன குணவிசேஷங்கள் காட்டப்பட்டன? இக்குண விசேஷங்களில் எது முக்கியம்? அதற்கு எல்லையெது?

விடை ஆச்ரிக்கவந்த சேதனன் தன் தோஷங்களைக் கண்டு அஞ்சாமைக்கு உறுப்பாக கன்றினிடம் பசுவுக்கு இருக்கும் அன்புபோன்ற வாத்ஸல்யமும்' அவச்யம் நமது கார்யம் செய்தருளுவன் என்பதற்கு உண்மையை உடையவனுயிருக்கும் ஸ்வாமித்வமும், உபயவிபூதிக்கும் பிரகாசமான ஸ்வாமித்வத்தைக் கண்டு சேதனன் தன்தாழ்வை அநுஸந்தித்து அகலாமைக்கு உறுப்பான ஸௌசீல்யமும், தன் விரோதிகளைக்கண்ணுக்கு இலக்காகச்செய்யும் ஸௌலப்யமும் "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிறபடி ப்ராப்தி விரோதியைப்போக்கி ப்ராப்யனை தன்னை உபகரிக்கைக்கு உறுப்பான ஞானசக்திகளோடும் கூடினவன். இக்குணங்களில் ஸௌலப்யம் முக்கியமானது. அதற்கு எல்லை "நமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம்தானே" என்கிறபடி நிச்சயிக்கிறது பண்ணியிருக்கும் அர்ச்சாவதாரம்.

வினு (41) ஆழ்வாராசார்யர்கள் எம்பெருமான் ஸந்நிதானத்தை ஐந்துவிதமாக அறுதியிட்டுச்சொல்லியிருக்கிறார்கள். அவையாவை? இவைகளில் எப்போதும் ஸுலபஸேவ்யம் எது? அதன்மஹிமை எப்படிப்பட்டது?

விடை (1) பரம் (2) வ்யூகம் (3) விபவம் (4) அந்தர்யாமி (5) அர்ச்சாவதாரம்

(1) பரம்– வைகுந்தமாகுகர் என்கிற பரமபதத்திலே அனந்தாவதாரகந்தமாய் ஸகலஸ்ருஷ்டி ஸ்திதிஸம்ஹாரங்களுக்கும், கர்த்தாவாய், ஜ்ஞானதிகுண

பரிபூர்ணராமி ஸ்ரீயபதியாய் எழுந்தருளியிருக்கும் பரவாஸுதேவர்.

(2) வ்யூகம்– திருப்பாற்கடலில் ஆர்த்தரக்ஷணத் துக்காகவும், உபாஸகர்களின் அனுக்ரஹத்திற்காக வும் எல்லா அவதாரங்களுக்கும் மூலகந்தமாய் எழுந்தருளியிருக்கும் சதுர்வ்யூஹமூர்த்திகள்.

(3) விபவம்– துஷ்டஸம்ஹார சிஷ்டபரிபாலனத் துக்காகவும், தந்தத்காலங்களிலுள்ள ஆஸ்திகர்க ளுடன் புரையறக் கலக்கைக்காகவும் அவதாரம் செய்த ஸ்ரீராமகிருஷ்ணாதிகள்.

(4) அந்தர்யாமி– அவாப்தஸமஸ்தகாமனும் கல்யா ணகுணாத்மகனும் உள்ள ஸர்வேச்வரன் ஆச்ரித வத் ஸலனும் ஸகல ஜீவாத்மாக்களுக்குள் எழுந்தருளியிருக் கும்நிலைமை.

(5) அர்ச்சாவதாரம்– கிழ்ச்சொன்னவைபோல் சிர மப்படாமல் ஸாதாரணஜனங்களுக்கு ஸௌகர்ய மாய் தேசகாலாதிகாரி நியதமில்லாதபடி கோயில் கொள் தெய்வங்களான திவ்யமங்கள விக்ரஹங்கள்.

இந்த அவதாரத்தைத்தான் "பின்னுளர் வணங் கும் சோதி" என்றும் "பைதாமஹம் தனம்" எனறும் பேசிநின்றார்கள் ஆழ்வாராசார்யர்கள். இப்படி இவர்கள் உபகரித்ததினால்தான் அஜ்ஞர்களான நாம் எல்லோரும் இக்கலிகாலத்தில் எம்பெருமானைக் கண் ணாரக்காணவும், கொண்டாடவும், கைங்கரியங்கள் செய்யவும் பிராப்தர்களாக விருக்கிறோம். இந்த ஏற்றமும், அர்ச்சாவதாரமும் நமக்கே அஸாதார ணம். மற்ற மதாசாரியர்கள் உபதேசித்தும் சிலரை

நியமித்தும் ஞானசாஸ்திரமும் செய்து வைத்தார்களேயொழிய வேறில்லை. நம்முடைய ஆசார்யர்கள்தான் கையிலங்கு கெல்லிக்கனியாய் அறுதியிட்டார்கள். பிறகு நிர்விவாதமாய் சர்வமதத்திலும் அர்ச்சாவதாரம் ஏற்பட்டது.

"பச்சைமாமலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம்கொழுந்தே யென்னும்
இச்சுவைதவிரயான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும்வேண்டேன் அரங்கமா நகருளானே"

"என்னமுதினைக் கண்டகண்கள்
மற்றொன்றினைக் காணவே"

என்றெல்லாம் ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்கள் மூலமாக ஈச்வரனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை நமக்குக்காட்டுகிறார்கள். அதே திவ்யமங்கள விக்ரஹத்திற்கு கிஞ்சுவகுறியாகத்தான் கோயில்களில் அர்ச்சாவதார மூர்த்திகளை தரிசிக்கிறோம்.

அவதாரமூர்த்திகளை அவரவர் காலத்திலுள்ளவர்களே சேவித்துப் பேறுபெற்றிருக்கமுடியும். ஆற்றிலெள்ளத்தின் போது அந்தத்தண்ணீர் அப்போதிருப்பவர்களுக்குத்தானே கிடைக்கும் தண்ணீர் தேங்கியிருக்கும் மடுவோ தெளிந்த வெள்ளம் இல்லாத காலங்களிலும் பயன் தருவதாமே. அவதார காலத்தை வெள்ளம் போகும் காலத்திற்கு ஒப்பிடலாம். அர்ச்சாவதாரத்தையோ வெள்ளத்தில் தேங்கின மடுவிற்கு ஒப்பிடலாம். இதனால் தான் "அவதாரங்களிலே தேங்கினது அர்ச்சாவதாரம்" என்பர் பெரியார். தமருகந்தது

எவ்வுருவம் அவ்வுருவம்" என்றார் பொய்கையாழ்வார். "பக்தர் உகந்த உருவங்களெல்லாம் பகவானுடைய விக்ரஹங்கள்" என்றபடி. அர்ச்சாவதாரம் சதுர்புயம் வேண்டாம் என்று ஸ்ரீசுதர்சனமும், ஜயம் உண்டெனவும் ஸ்ரீபாஞ்சஜன்யமும், அழைத்து அணைப்பது போலுள்ள திருக்கைகளும், அஞ்சேல் என்ற அபயஹஸ்தமும், ஆச்ரிதனான உனக்கு இழியும் துறையும், நீ போகிலும் விடாததுமான நிருவடிகளும், என்றும் ஸம்பாஷிக்கும் புன் முறுவலும், குளிர்ந்த திருக்கண்களும், வைஷ்ணவத்வ சின்னமான திருமண் காப்பும், அழகுவழியும் திருமுகமண்டலமும், ஸ்வாமித்வ ஸூசகமான கிரீடமும், பரத்வஸூசகமான சங்கோலும் கூடினவராய் "எல்லாரும் வாருங்கோள்" என்று ஸேவை ஸாதிக்கிறார். இப்போப்பட்ட நித்யமங்கள விக்ரஹத்தை ஆச்ரிதர்கள் ஸேவித்தால் ஒருவித ஆனந்தம் அவர்களுக்கே உண்டாகி ஒவ்வொரு தடவை ஸேவிக்கும் பொழுது ஒரே விக்ரஹமாக இருந்தபோதிலும் "அப்பொழுதைக்காப்பொழுதென் ஆராவமுதமே" என்றபடி. வெவ்வேறான ஆனந்தமயரூபங்களுடன் ஸேவை ஸாதிக்கிறார். விரோதிகள் ஸேவித்தால் ஒருவித அருவருப்பும், எரிச்சலும் உண்டாகி க்ரூரமான ஸேவை ஸாதிக்கிறார். அவர்களுக்கு எம்பெருமானே ஸேவித்ததாகவே தோன்றுகிறதில்லை. பிரயோஜனமில்லாத ஒருவித பிம்பத்தை வணங்கினதாகவே நினைக்கிறார்.

வினா (42) அர்ச்சாவதாரம் சேதனனுக்கு ரஹஸ்யம் என்பது எப்படி?

விடை அர்ச்சாவதாரத்தில் ஸ்ரீராகசக்திகள் பிரகாசமாம்படி திருக்கைகளிலே தரித்துக்கொண்டிருக்கிற திருவாழி திருச்சங்கு முதலிய திவ்யாயுதங்களும், வாத்ஸல்யம் பிரகாசமாம்படி வைத்த அபயஹஸ்தமும், ஸ்வாமித்வபிரகாசகமாக க்கலித்தருளுவபிஷேகமும், லௌகில்யப் பிரகாசகமான திருமுகமும் முறுவலும், அனைவரும் கண்டு பற்றலாம்படியான லௌலப்யத்திற்கு பிரகாசகமான ஆஜானபத்மத்திலே அழுத்தின திருவடிகளும், அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கிற எம்பெருமானே சேதனர்களுக்கு ரக்ஷக னென்று காட்டுகின்றன.

வி (13) உபாயாந்தரங்களில் ஏதேனுமொன்றில் அன்வயித்த சேதனனுக்கு எம்பெருமானுடைய ஆனுகூல்யம் கிடைக்குமா? காயிகப்பற்றினால மாத்திரம் பலம் ஸித்திக்குமா?

விடை சேதனன் ஸ்வரூப தமோகுணங்களாலே கலங்கி உபாயாந்தரங்களில் ஏதேனுமொன்றில் அன்வயித்து பிறகு ஸத்வகுணம் கலியெடுத்து அநுதாபம் பிறந்து ப்ரபத்தியையே அனுஸந்தித்தால் பலனை அடைகிறான்.

காயிகப்பற்றினால் அதாவது ரக்ஷித்தருளவேணு மென்று வாயினால் ப்ரார்த்தித்தாலும் கைகூப்பி நமஸ்கரித்தாலும் பலம் ஸித்திக்கும்.

வி (44) மிதுன கைங்கர்யம் ஸ்வரூபப்ராப்தம் என்று யாராவது காட்டியிருக்கிறார்களா?

வி இளையபெருமாளே சேர்த்தியில் அடிமை செய்து காட்டியிருக்கிறார்.

வி (45) கைங்கர்யம் எவ்வித உகப்போடு செய்யவேண்டும்?

வி "உனக்கே நாமாட்செய்வோம்" என்றபடி சேஷிக்கே உகப்பாகச்செய்யவேண்டும். நித்ய விபூதியிலும் கூட கைங்கர்யத்தில் ஸ்வபோக்த்ருத்வ ப்ரதிபத்தியாகிற விரோதி விளையாமல் பார்க்கவேணும். அது பற்றியே நம்மாழ்வாரும் "மருந்தேனுங்கள் போக மிழ்ச்சிக்கென்று பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும் பிரான்" என்று அருளிச்செய்திருக்கிறார்.

—: இனி சரமச்லோகம் :—

வி (46) எம்பெருமான் சரமச்லோகத்தை எதுக்காக உபதேசித்தார்?

வி கர்மயோகம், ஞானயோகம் முதலிய உபாய விசேஷங்களே மோக்ஷஸாதனமாகக் கண்ணன் உபதேசித்தருளினார். அவைகளைக் கேட்ட அர்ஜுனன் அவை அநுஷ்டிக்க எளியனவல்ல என்றும், பரதந்த்ரமான ஸ்வரூபத்திற்கு ஸ்வப்ரயத்ந ரூபங்களான இவை விரோதிகளென்றும் நினைத்து "இவற்றுலே

எம்பெருமானைப் பெறுவதான்முண்டோ; இனி இழந்தேபோமித்தனே" என்று சோகித்து நின்றான். அந்த சோகத்தைப்போக்க அனுஷ்டிக்க லகுவானதும், ஸ்வரூபாநு ரூபமானதுமான இந்த சரமோபாயம் அருளிச்செய்யப்பட்டது.

வி (47) இந்த சரமச்லோகத்தில் விவரிக்கப்படுவது என்ன?

வி இந்தச்லோக பூர்வார்த்தத்தில் அதிகாரி செய்யவேண்டுமவையும், உத்தரார்த்தத்தில் சர்வேச்வரன் செய்யுமவையும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

வி (48) [ஸர்வதர்மாந்] என்றவை எவை?

வி ஸ்வதந்திர ஸாதநமாகச்சொல்லப்பட்ட கர்மயோகமும் கர்ம ஸாத்யமான ஞானயோகமும் கர்மஞான ஸஹகாரமான பக்தியோகமும், பகவத் ப்ராப்திக்கு ஸாதநமாகச்சொல்லப்பட்ட அவதார ரஹஸ்யஜ்ஞாநம் புருஷோத்தம வித்யை புண்யதேசவாஸம், பகவத் ப்ராப்தி ஸாதநமாகச்சொல்லப்படுகிற திருநாமஸங்கீர்த்தநம், திருவிளக்கெரிக்கை திருமாலை யெடுக்கை முதலாக ஸாதநபுத்தியோடு செய்யப்படுமவையும் [தர்மாந்] என்பதற்கு விவக்ஷிதங்கள்.

வி (49) நாம் ஸித்தோபாயத்தை எவ்விதமாக எவரிடம் பற்றவேண்டும் அப்படிப்

பற்றிலும் எம்பெருமான் நமக்கு என்ன செய்கிறார்?

விடை பகவத் ப்ராப்திக்கு உபாயத்தை விரும்புகிற நாம் உபாயமல்லாதவையான கீழ்சொன்ன தர்மங்களில் உபாய புத்திபண்ணினோமே யென்கிற அனுதாபத்தோடுகூட விட்டு, புருஷகாரம் செய்யும் பிராட்டியேகுற்றத்தைக்காட்டி அகற்றப்பார்க்கும்போதும் விடமாட்டாதே "என்னடியார் அது செய்யார்", என்று மறுதலித்து ரக்ஷிக்குமவனும் "ஹேக்ருஷ்ண, ஹே மாதவ" என்று அர்ஜுனன்தானே சொல்லும்படி கலந்து பரிமாறுகிறவனும்.

அளவிடப்படாத லாவண்யத்தையுடையவனும் அப்ராக்ருதமான திருமேனியைக் கண்ணுக்கிலக்காம்படி பண்ணுகையாலே லாவண்யம் பிரகாசிக்கிறவனும், தன்னை அங்கீகரிக்கைக்காக அனேக அவதாரங்களைச்செய்து, அவதரித்த இடங்களில்ருசி விச்வாஸங்களை விளைப்பதான தன்குண சேஷ்டிதங்களைப் பிரகாசிப்பிக்கிறவனுமாக விருக்கிற எம்பெருமானுக்கு சேதன ப்ரவிருத்தியில் ஒன்றையும் லக்ஷியாத ஸித்தோபாயத்தைக் கைப்பற்றவேண்டும். அப்போழுது நிரங்குச ஸ்வதந்திரனுயிருக்கிற எம்பெருமான் அவித்யை கர்மவாசனை ருசி ப்ரகிருதிஸம்பந்தம் முதலிய அனிஷ்டங்களை நிவர்த்திப்பித்து முன்னம் செய்தபாபங்களை யெல்லாம் வாத்ஸல்யத்தாலே புண்யமென்றே நினைத்து ஸ்வப்ராப்திபைப் பண்ணுவிக்கிறன்.

வி (50) கண்ணன் உபாயாந்தரங்களை முதலில் எதற்காக உபதேசித்தார் "மாம் ஏகம்" என்பது எதைக்காட்டுகிறது.

வி சேதனன் அனுஷ்டிப்பதற்காக தானே ஏற்படுத்தின சாஸ்திர விதிகங்களான; ஸாதனமார்க்கமாக நினைக்கக்கட்டிய கர்மஞான யோகங்களை உபாய புத்தியில்லாமல் அர்ஜுனமுகேன சேதன கோடிகள் அனுஷ்டித்து லித்தோபாய ஸ்வீகாரம் செய்வதற்காக எம்பெருமான் இவ்வுபாயாந்தரங்களை முதலில் உபதேசித்தார். "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்பதற்கு உபாய புத்தியோடு அனுஷ்டிப்பதைவிட்டு கைங்கர்யரூபேண அனுஷ்டிக்கவேண்டும் என்பதை.

"மாம் ஏகம்" என்பது என்னைத்தவிர அதாவது ஸ்ரீ கிருஷ்ணனைத்தவிர வேறு ஒருவரும் நித்ய ஸூரிகள் வசிக்கும்படியான பரமபதத்தைக்கொடுக்கத் தக்கவரில்லை என்பதைக் காட்டுகிறது.

வி (51) 'அஹம்' என்று எம்பெருமான் சொன்னதற்கு என்ன அர்த்தம் ஏற்படுகிறது?

வி ஸர்வசக்தனும் ஸர்வஜ்ஞனும் சேதநர்க்கு ஸகலவித பந்துவுமான எம்பெருமானே (தானே) என்று குறிக்கிறது.

வி (51 A) எம்பெருமானுக்கும் நமக்கும் எவ்விதமான பந்துத்வம்.

விடை அந்த பந்துத்வம் ஒன்றல்ல, இரண்டல்ல. நவ விதமாகச் சொல்லப்படுகிறது. இதைத் திருமந்திரத்திலேயே உணரவேண்டும். இப்போது விவரித்துக்கூறுவோம், கேண்மின்.

அஸம்ஹிதாகாரப்படியின்படி மூன்று பதமாகக் கொண்ட ப்ரணவத்தில் முதற்பதமான 'அ' காரத்தில் மூன்று உறவுகள் தோன்றும் 1. பிதாபுத்ர பாவம். 2. ரக்ஷ்யரக்ஷகபாவம். 3. சேஷசேஷிபாவம். அகாரத்திற்கு ப்ரக்ருதி சக்தியென்றும் நாது சக்தி யென்றும் இரண்டுவகையான சக்திகளுண்டு. "அகாரோவை ஸர்வாவாக்" என்றும் "அகாரமுதலவெழுத்தெல்லாம்" என்று சொல்லுகிறபடியே "அ"காரமானது எல்லா எழுத்துக்களுக்கும் முதன்மையாயிருந்துகொண்டு, தனக்கு அர்த்தமான எம்பெருமான் உலகுக்கெல்லாம் முதல்வன் என்று காட்டுதலாகிறவிது ப்ரக்ருதிசக்தி யெனப்படும். "ஆதிபகவான் முதற்றேயுலகு" என்ற குறளும் இதனையே காட்டிநிற்குகும். ஆகலே, அகாரத்தில் ப்ரக்ருதி சக்தியினால் ஏற்பட்ட உறவுகார்ய காரண பாவம் (அல்லது) ஜந்யஜநகபாவம் (அல்லது) பிதாபுத்ரபாவம்.

அந்த அகாரமானது "அவரக்ஷணே" என்கிற தாதுவிலிருந்து தோன்றினதாகையாலே எம்பெருமான் ஸர்வரக்ஷகன் என்பதாகும். இதனால் (2) ரக்ஷ்ய ரக்ஷகபாவமாகிற உறவு தோன்றுகிறது. இது தான் நாதுசக்தி லிங்கமெனப்படும்.

இந்த அகாரத்தின்மேல் வியாகரண சாஸ்த்ரப் படி (வைதிக ப்ரக்ரியையில்) சதுர்த்தி விபக்தியி ருந்து லோபித்ததாகக் கொள்ளப்படுகிறது. இல் லாவிடில் அன்வயிக்கவேமாட்டாது. அந்த விபக்தி யானது 'அவனுக்கு சேஷப்பட்டது" என்கிற பொருளைக்காட்டுதலால் (3) சேஷசேஷிபாவம் என் கிற வுறவு தேறிற்று.

இனி அடுத்துள்ள உகாரமானது அவகாரணப் பொருளதாய் எம்பெருமானுக்கே சேஷப்பட்டது என்று காட்டுதலால் "கண்டாரிகழ்கனவே காத லன்தான் செய்திடினும், கொண்டானே யல்லா லறி யாக்குல மகள்போல்" (பெருமாள் திருமொழி) என்கிறபடியே (4) பதிபத்நீ பாவமாகிற வுறவு தேறுகின்றது.

அதற்கடுத்துள்ள 'ம'காரமானது "மஜ்ஞாநே" "மம அவபோதே"என்கிற தாதுக்களிலிருந்து நிஷ் பன்னமாகி ஜ்ஞாதாவான ஆத்மாவைச் சொல்லுத லால் (5) ஜ்ஞாத்ருஜ்ஞேய பாவமென்கிற உறவு தேறிற்று. எம்பெருமான் அறியப்படுமவன், ஆத்மா அறிகின்றவன் என்கிற பொய்கையார் பாசுரம் இங்கு அனுஸந்தேயம்.

அதற்குப்பிறகு உள்ள 'நம:'பதத்தினால் தன்னை ஸமர்ப்பித்துக்கொள்வதில் தனக்கு எவ்விதமான உரி மையும் இல்லை யென்று காட்டுகிற முகத்தினால் ஆத்மவர்க்கமெல்லாம் எம்பெருமானுடைய ஸொத்து என்று காட்டுதலால் (6) ஸ்வஸ்வாமி பாவம் என் கிற வுறவு தேறிற்று.

இனி காராயணபதத்தை யெடுத்துக்கொண்டால் இதற்கு சுத்புருஷ ஸமாஸமென்றும் பஹுவ்ரீஹி ஸமாஸமென்றும் இருவகையான வ்யுத்பத்திமார்க்கங்கள் கொள்ளப்பட்டு, காரபதார்த்தமான ஸகலவஸ்துக்களுக்கும் எம்பெருமான் ஆதாரமென்றும், அந்த ஸகலவஸ்துக்களையும் தான் ஆதாரமாகவுடையவனென்றும் தெரிந்து கொள்ளுகிறோம். ஆகலால் ‘காராணம் அயநம்” என்கிற சுத்புருஷனால் (7) ஆதாராதேயபாவம் என்கிற உறவு தேறுகின்றது. “காரா: அயநம் யஸ்ய ஸ:” என்கிற பஹுவ்ரீஹியால் (8) சரீரசரீரிபாவமென்கிற வுறவு தேறுகின்றது. காரங்கள் பகவானிடத்திலே யிருக்கின்றனவென்பது சுத்புருஷலிங்கம். காரங்களிலே பகவானுளன் என்பது பஹுவ்ரீஹிலிங்கம். அவற்றிலே இவனிருப்பதாவது அவற்றை உடலாகக்கொண்டு தான் அவற்றுக்கு உயிராக இருப்பதேயாதலால் அதனால் சரீராத்மபாவம் லிங்கித்த தென்னச்குறையில்லை.

இனி அந்த காராயணபதத்தின் மீதுள்ளசதுர்த்தீவிபக்தியானது, காகாக்ஷிந்யாயத்தாலே (அதாவது காகம் எந்தபக்கம் திரும்பிபார்க்குமோ அந்தபக்கத்திலுள்ளவை தெரியும்) தன்னிடத்திலும் அந்வயிக்கின்ற நமஸ்ஸினால் பரிஷ்காரம்பெற்று காராயணனுக்கு செய்யப்படுகின்ற சைங்கரியத்தின் போகமும் அவனுக்கேயன்றி இந்த ஜீவனுக்கில்லையென்று நிஷ்கர்ஷித்துக்காட்டுதலால் (9) போக்த்ருபோக்யபாவம் என்கிற உறவைத்தெரிவிக்கின்றது. எம்பெருமான் போக்தா, ஜீவாத்மா போக்யன் என்ற

வாறு. ஜீவாத்மாவை போக்தாவாகவும் எம்பெரு மானை போக்தியஞாகவும் கொள்வதும் ஒருபுடை யுண்டெனினும், திருமந்திரத்தில் வடிக்சட்டின பொருள் முற்றுறபணித்தேயாகும். ஆகத் திரு மந்திரத்தினால் சுவவித சம்பந்தங்கள் தெரிய வந்தன.

வினா (52) "ஸர்வபாபேப்ய:" என்பது எவ் வித பாபங்களைச் சொல்லுகின்றன?

விடை எம்பெருமானை அடைந்து உஜ்ஜீவிக்க விரோதிக ளான பாபங்களாகிற அவித்யை அதாவது அஜ்ஞா னம், கருமம் அதாவது புண்யபாபம், வாஸனை அதாவது அஜ்ஞாகவாஸனை கர்மவாஸனை, ப்ரக்ருதி ஸம்பந்தவாஸனை முதலியவைகளும், நித்யநைமித் திக கருமங்களில் ஏற்படும் பாபங்களும் (அதாவது தூரும்புதூர்க்குகை, தினவு சொரிகை, "நாம் இவற் றைச்செய்யாவிடில் லோகம் நம்மை அபவாதம் சொல்லுமே"; என்று பயந்துசெய்யும் பாபங்களும், ரஜோகுண தமோகுணங்களாலே கலங்கி முன்னைட் விட்ட உபாயங்களிலே மீண்டும் அவ்வயிக்கிற பாபங் களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

வினா (53) சரமச்லோகத்தால்தேறின அர்த்த மென்ன?

விடை ஞானசூன்யங்களாயும், அசக்தங்களாயும் அநித்யங் களாயுமிருக்கிற உபாயாந்தரங்களை உபாயமென்று எண்ணினேனேயென்று அனுதாபப்பட்டு அக்கவழி

யில்போகாமல் ஸர்வஜ்ஞனும், ஸர்வசக்தனும், ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனும், அவாப்த ஸமஸ்தகாமனும், ஸகலவித பந்துவாயுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளையே ஆச்ரயித்தால், அவன் நம்முடைய ஸகலவித மோக்ஷவிரோதி பாபங்களையும் அழித்து ப்ரக்ருதியினின்றும் விடுபடும்படிசெய்து, முக்தனாக்கி ரக்ஷிக்கிறான். நாம் அதுவிஷயமாக வியசனப்படவேண்டிய தில்லை என்பதே.

விஞ (54) முமுக்ஷுப்படி காலக்ஷேபத்தி விருந்து ஒருபொழுதும் மறக்கக்கூடாத தாகத் தெரிந்துகொண்ட விஷயங்கள் என்ன?

விடை தெரிந்துகொண்ட விஷயங்கள் மூன்று

(1) ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம்.

(2) ஸ்ரீ வைகுண்டத்தில் திருமாமணிமண்டபத்தில் நித்ய ஸூரிகளோடு கலந்து குணானுபவ கைங்கர்யம் செய்வதே மோக்ஷம்.

(3) இதற்கு ஸதாசார்ய கடாக்ஷமே உபாயம்.

டெங்கணிகோட்டை

ராவ்ஸாஹிப். S. ரங்கஸ்வாமி ஐயங்கார்

தொகுத்த

ரஹஸ்யார்த்த விஞ்விடை முற்றிற்று.

ஸ்ரீ

மதிப்புரையும் பதிப்புரையும்.

ஸத்ஸம்பிரதாயம்வல்ல பெரியீர்காள்!, சேலம்ஜில்லா டெங்கணி கோட்டையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான் உவே. ராவ் ஸாஹிப், ரங்கஸ்வாமிஐயங்கார் என்னும் மஹா னுடைய பரிசயம் அடியேனுக்குச் சிலவாண்டுகளாகவுண்டு. லௌகிகவாழ்க்கையிலிருந்து கொண்டே வைதிகத்திலும் தேர்ச்சி பெற்றுள்ள மஹான்களில் இந்த ஸ்வாமி முதலி வெண்ணைக்கூடியவர். இவர் இரவும் பகலும் நமது ஸம்பிர தாயக்ரந்தங்களை ஸேவிப்பதிலும் அவற்றில் அரிய பெரிய ஆராய்ச்சிகளைச் செய்வதிலுமே ஊக்கமுடையவர். ஞானங் கனிந்த மஹாங்கொண்ட ஆசாரியர்களை அநவரதமும் அருகி லேயே வைத்துக்கொண்டு அவர்களிடம் அருமருந்தான அர்த்த விசேஷங்களைக் கேட்பதும் அவற்றை இடைவிடாது மனனஞ்செய்வதும் எடுபடுத்திவைத்து உலகுக்கு உதவுவ தும் இவருடைய நித்யகாலக்ஷேபம்.

அடியேன் சென்ற வருஷத்தில் முமுக்ஷுப்படி ஸார மென்கிற நூலை யியற்றி அச்சிட்டு இந்த ஸ்வாமிக்கு அனுப் பினேன். அதைக் கடாக்ஷித்தருளி "ரஹஸ்யார்த்த விஞ் விடை" என்கிற நூலைத்தாம் எழுதி அடியேனிடம் அனுப் பியருளினர். அது அமைந்திருக்குமழகு உண்மையில் எனது நெஞ்சைக் கவர்ந்தது. இதனை வெளியிட்டால் ஸ்ரீவைஷ்ண வவுலகுக்கு மஹோபகாரம் செய்ததாகு மென்கிற துணிபு அடியேனுக்கு உண்டாயிற்று. ஆகவே இதை அச்சிட்டு

வெளியிட விரும்பி அப்படியே செய்து முடிப்பதற்கு வேண்டிய சிறு உதவியைச்செய்து அடியேனும் கிஞ்சித்கரிக்கப் பெற்றேன்.

ரஹஸ்யார்த்தங்களைப் புத்தகமூலமாகப் பார்த்துத் தெரிந்து கொள்வது பயன்படாது. ஒரு ஆசாரியரை யடி பணிந்து கேட்டே அறிந்து கொள்ளத்தக்கது. அங்ஙனே காலக்ஷேபஞ்செய்யும் அதிகாரிகளுக்கு ஞாபகசக்தியை பெறுக்கவும் நிலைகாட்டவும் இச்சிறு நூல் மிகவும் பயன் படுமென்பது அடியேனுடைய அத்யவஸாயம்.

இங்ஙனம்,

ஸ்ரீவைஷ்ணவதாஸன்

ஸ்ரீகாஞ்சி, P. B. அண்ணங்கராசாரியன்.

25—1—1945.

---

http://acharya.org